# நியூ பாரத் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி

## ஏழாம் வகுப்பு தமிழ் வினா விடை தொகுப்பு

## இயல் -1 செய்யுள்

## எங்கள் தமிழ்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1.** நெறி என்னும் சொல்லின் பொருள் <u>வழி.</u>

**2.** 'குரலாகும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது <u>குரல் + ஆகும்</u>.

**3.** வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் <u>வானொலி</u>.

**நயம் அறிக:**

**1. 'எங்கள் தமிழ்' பாடலில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

அருள்நெறி - அதுவே

பொருள்பெற - போற்றா

கொல்லா - கொள்கை

**2. 'எங்கள் தமிழ்' பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.**

அருள் - பொருள்

கொல்லா - எல்லா

அன்பும் - இன்பம்

**3. 'எங்கள் தமிழ்' பாடலில் இறுதி எழுத்து ஒன்றுபோல் வரும் இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.**

தரலாகும் - குரலாகும்

புகழாது - இகழாது

குறியாக - நெறியாக

ஊக்கிவிடும் - போக்கிவிடும்

## குறுவினா:

**1. தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?**

(i) தமிழ் மொழி, அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது.

(ii) அதுவே தமிழ் மக்களின் குரலாகவும் விளங்குகிறது.

**2. தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.**

(i) தமிழ்மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்.

(ii) தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார். இவையே கற்றவரின் இயல்புகளாகும் என நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் கூறுகிறார்.

## சிறுவினா:

**1. 'எங்கள் தமிழ்' பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

(i) தமிழ்மொழி, அருள்நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது.

(ii) அதுவே தமிழ் மக்களின் குரலாகவும் விளங்குகிறது.

**தமிழ் மொழியைக் கற்றவரின் இயல்புகள்:**

(i) தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்கள்.

(ii) தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்கள்.

**எல்லா மனிதர்களும் இன்புற்று வாழும் நெறிகள்:**

கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.

**தமிழ்மொழி தேன் போன்றது:**

(i) நம் தமிழ்மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்.

(ii) அஃது அச்சத்தைப் போக்கி இன்பத்தைத் தரும்.

(iii) எங்கள் தமிழ்மொழி தேன் போன்ற மொழியாகும்.

## சிந்தனை வினா:

**1. கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?**

(i) தமிழைப் போற்றி புகழாத கவிஞர்கள் இல்லை எனலாம். நம் கவிஞர் எங்கள் தமிழ் என்னும் கவிதையில் நம் தமிழ் மொழியானது அன்பையும் அறத்தையும் தூண்டக்கூடியது.

(ii) தேன் பல ஆண்டுகள் கெடாமல் இருப்பதை போலத் தமிழும் என்றும் கெடாமல் பாதுகாப்புடன் திகழ்கிறது.

(iii) தேன் சாப்பிடச் சாப்பிட உடல் வளம் பெருகும். தமிழ் கற்க கற்க உள்ளம் வளம் பெருகும். அதனால் கவிஞர் தமிழைத் தேனுடன் ஒப்பிடுகிறார்.

## மேலும் சில வினா:

**1. எங்கள் தமிழ் பாடலை இசையுடன் பாடி மகிழ்க.**

இப்பாடலை இசையுடன் பாடிப் பழக வேண்டும்

1. குறி என்பதன் பொருள் குறிக்கோள்
2. விரதம் என்பதன் பொருள் நோன்பு

# இயல் -1 செய்யுள்

# ஒன்றல்ல இரண்டல்ல

## சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

1. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் <u>பரணி</u>

2. வானில் <u>முகில்</u> கூட்டம் திரண்டால் மழை பொழியும்.

3. ‘‘இரண்டல்ல’’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது <u>இரண்டு + அல்ல</u>

4. ‘‘தந்துதவும்’’ எனனும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது <u>தந்து +உதவும்</u>

5. ஒப்புமை + இல்லாத என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் <u>ஒப்புமையில்லாத</u>

## குறு வினா விடை

**1. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாக கவிஞர் கூறுவன யாவை?**

நம் நாட்டில் வீசும் தென்றலில் தேன்மனம் கமழும். சுவைமிகு கனிகளும் பொன் போன்ற தானியக் கதிர்களும் விளையும். தமிழ்நாட்டின் நன்செய் நிலவளம் ஒன்றிரண்டல்ல பலவாகும் எனக் கவிஞர் கூறுகிறார்.

**2. ‘ஒன்றல்ல இரண்டல்ல’- பாடலில் இடம் பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக**

முல்லைக்குத் தேர் தந்து மழை மேகத்தை விடப் புகழ் பெற்றான் வள்ளல் வேள்பாரி புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்தான் குமண வள்ளல் இவர்கள் போல் புகழ்பெற்று வாழ்ந்த வள்ளல்களின் வரலாறு பலவாகும்.

## சிறு வினா விடை:

**1. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர்** கூறுவன யாவை?

பகைவரை வென்றதைப் பாடுவது பரணி இலக்கியம், இசைப்பாடலான பரிபாடல், கலம்பக நூல்கள், எட்டுத் தொகை, வான்புகழ் கொண்ட திருக்குறள், அகம், புறம் ஆகியவற்றை மெய்ப்பொருளாக்க் கொண்டு பாடப்பட்ட சங்க இலக்கியங்கள், எனத் தமிழின் இலக்கிய வளங்கள் ஒன்றிரண்டல்ல பலவாகும்.

## சிந்தனை வினா விடை:

**1. தமிழில் அற இலக்கிங்கள் மிகுதியாகத் தோன்றக் காரணம் என்ன?**

அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே என்று தண்டியலங்கார நூற்பா கூறுகிறது. மனிதன் வாழ்க்கையில் அடைய வேண்டியவை அறம், பொருள், இன்பம், வீடு போன்ற நான்கும் என்பது இதன் கருத்து. தமிழ்ச் சிந்தனைக்கும் இந்தியப் பொதுச் சிந்தனைக்கும் ஓர் அடிப்படை வேறுபாடு உண்டு. இந்தியப் பொதுச் சிந்தனை மரபின்படி அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கும் அடைய வேண்டியவை. தமிழ்ச் சிந்தனை மரபில் தொல்காப்பியர் காலந்தொட்டே அறம் பொருள் இன்பம் என்ற கருத்து மட்டுமே உண்டு. வீடு பற்றிய கருத்து கிடையாது.

இந்திய மொழிகள் எல்லாவற்றையும் விட தமிழில்தான் அகநூல்கள் அதிகமாக இருக்கின்றன. நம் தமிழில் சிறந்த அற இலக்கியமாக திகழ்வது திருக்குறள். நம்முடைய மானுடர்கள் ஒழுங்கீனமான செயல்களில் ஈடுபடும்போது அவற்றை திருத்திக் கொள்ள அறக்கருத்துகளையும் நீதிக் கருத்துகளையும் போதிக்கும் தேவை ஏற்படுகிறது. அதனால் தோன்றிய இலக்கியம் தான் அற இலக்கியமாகும்.

## உரைநடை

# பேச்சு மொழியும் எழுத்து மொழியும்:

## சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:

1. மொழியின் முதல்நிலை பேசுதல் <u>கேட்டல்</u> ஆகியவனவாகும்.

2. ஒலியின் வரிவடிவம் எழுத்து ஆகும்.

3. தமிழின் கிளைமொழிகளில் ஒன்று தெலுங்கு

4. பேச்சு மொழியை உலக வழக்கு என்றும் கூறுவர்.

**சரியா தவறா என எழுதுக:**

1. மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகிறது சரி

2. எழுத்து மொழி காலம் கடந்தும் நிலைத்து நிற்கிறது சரி

3. பேசுபவரின் கருத்திற்கு ஏற்ப உடனடிச் செயல்பாட்டிற்கு உதவுவது எழுத்துமொழி தவறு

4. எழுத்து மொழியில் உடல் மொழிக்கு வாய்ப்பு அதிகம். தவறு

5. பேச்சுமொழி சிறப்பாக அமையக் குரல் ஏற்றத்தாழ்வு அவசியம். சரி

**ஊடகங்களை வகைப்படுத்துக:**

வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், நூல்கள் திரைப்படம், போன்றவை

**சிறு வினா:**

| வ.எண் | பேச்சு மொழி | எழுத்து மொழி |
|---|---|---|
| 1 | உலக வழக்கு என்பர் | இலக்கிய வழக்கு என்பர் |
| 2 | சொற்கள் பெரும்பாலும் குறுகி ஒலிக்கும் | சொற்கள் முழுமையாக எழுதப்படும் |
| 3 | உணர்ச்சிக் கூறுகள் அதிகம் | உணர்ச்சிக் கூறுகள் குறைவு |
| 4 | உடல் மொழியும், குரல் ஏற்றத் தாழ்வும் இணைவதால் அஃது எளிமையாக கருத்தை உணர்த்துகிறது | உடல் மொழி, குரல் ஏற்றத் தாழ்வு போன்றவற்றிற்கு இடமில்லை |
| வ.எண் | எழுத்து மொழி | பேச்சு மொழி |
| 1 | செய்தித்தாள் | வானொலி |
| 2 | நூல்கள் | தொலைக்காட்சி |
| 3 | மின்னஞ்சல் | திரைப்படம் |

## குறு வினா விடை:

**1. மொழியின் இரு வடிவங்கள் யாவை?**

(i) ஒரு மொழி உயிர்ப்போடு வாழ்வதற்குப் பேச்சு மொழித் தேவைப்படுகிறது.

(ii) காலம் கடந்து வாழ்வதற்கு எழுத்து மொழித் தேவைப்படுகிறது

(iii) எனவே, பேச்சு மொழி, எழுத்து மொழி இவ்விரு வடிவங்களும் மொழியின் இரு கண்களாகும்.

**2. பேச்சு மொழி என்றால் என்ன?**

(i) வாயினால் பேசப்பட்டு பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சு மொழியாகும்.

(ii) மொழியின் உயிர் நாடியாக விளங்குவது பேச்சு மொழியே என்பர்.

**3. வட்டார மொழி எனப்படுவது யாது?**

(i) பேச்சு மொழி இடத்திற்கு இடம் மாறுபடும்.

(ii) மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் மாறுபடும்.

(iii) இவ்வாறு மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டார மொழி என்பர்.

## சிறு வினா விடை:

**1.பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கம் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கினை விளக்குக:**

| வ.எண் | பேச்சு மொழி | எழுத்து மொழி |
|---|---|---|
| 1 | உலக வழக்கு என்பர் | இலக்கிய வழக்கு என்பர் |
| 2 | சொற்கள் பெரும்பாலும் குறுகி ஒலிக்கும் | சொற்கள் முழுமையாக எழுதப்படும் |
| 3 | உணர்ச்சிக் கூறுகள் அதிகம் | உணர்ச்சிக் கூறுகள் குறைவு |
| 4 | உடல் மொழியும், குரல் ஏற்றத் தாழ்வும் இணைவதால் அஃது எளிமையாக கருத்தை உணர்த்துகிறது | உடல் மொழி, குரல் ஏற்றத் தாழ்வு போன்றவற்றிற்கு இடமில்லை |

**2.கிளை மொழிகள் எவ்வாறு உருவாகின்றன?**

(i) ஒரே மொழியை பேசும் மக்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

(ii) அவர்கள் வாழும் இடத்தின் நில அமைப்பு இயற்கைத் தடைகள் போன்றவற்றின் காரணமாக பேசும் மொழியில் சிறிது சிறிது மாற்றங்கள் ஏற்படும்.

(iii) அவர்களுக்கு இடையேயான தொடர்பு குறையும்பொழுது இம்மாற்றங்கள் மிகுதியாகிப் புதிய மொழியாகப் பிரியும். அவ்வாறு உருவாகும் புதிய மொழிகள் கிளை மொழிகள் எனப்படும்.

(iv) கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய திராவிட மொழிகள் தமிழிலிருந்து பிரிந்து சென்ற கிளை மொழிகள் ஆகும்.

## சிந்தனை வினா விடை:

**இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் வாழ்வதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?**

இலக்கு + இயம் = இலக்கியம். இலக்கியங்கள் நம் வாழ்வை வளப்படுத்த வழிகாட்டக்கூடிய ஒளி விளக்குகளாகத் திகழ்கின்றன. இலக்கியங்கள் நம் வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றன. அற இலக்கியங்கள் வழங்கும் அற்புதமான கருத்துக்களை கடைப்பிடித்தால் நம் வாழ்வு பிறரால் பாராட்டப்படும் தன்மையுடையதாக விளங்கும். இலக்கியங்கள் வழங்குகின்ற கருத்துக்கள் எக்காலமும் நிலைத்து நிற்கின்ற கருவூலமாகத் திகழ்கின்றன. ஒவ்வொரு இலக்கியமும் ஒவ்வொரு உண்மையை பறைசாற்றுகின்றன. மணிமேகலை பசிப்பிணி அகற்றும் மாண்பை எடுத்துரைக்கிறது. சிலப்பதிகாரம் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும். உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்ற உண்மைகளை உலகிற்கு எடுத்துரைக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு இலக்கியமும் தரும் உண்மையான கருத்துகளைக் கடைப்பிடித்து நம் வாழ்வின் உன்னத நிலையை அடைவோம்.

இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற நிலை கடந்து, அறிவியல் தமிழ், கணினித் தமிழ், இணையத் தமிழ், ஊடகத் தமிழ் என்று மொழி வளர்ந்து கொண்டே வருகிறது. இத்தகு வளர்ச்சி தமிழ்மொழியின் உச்ச நிலை வளர்ச்சியை நோக்கிச் செல்கிறது என்பதைக் காட்டுகிறது. பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்கள் எழுத்து வடிவில் இருப்பதால் தான் நம்மால் இன்றும் படிக்க முடிகிறது.

## மேலும் சில வினாக்கள்:

1. வரிவடிவமாக எழுதப்பட்டுப் படிக்கப்படுவது <u>எழுத்து மொழி</u>யாகும்.
2. சொல்லை ஒலிப்பதில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தால் பொருள் வேறுபடும் என்பதை உணர்த்தும் இலக்கண நூல் <u>நன்னூல்</u>

3. பேச்சுமொழியில் உணர்ச்சிக் கூறுகள் அதிகமாக இருக்கும்

4. பேச்சுமொழியின் சிறப்புக் கூறுகள் உடல்மொழி ஒலிப்பதில் ஏற்ற இறக்கம்

5. பேசப்படும் சூழலைப் பொறுத்துப் பேச்சு மொழியின் பொருள் வேறுபடும்

# இலக்கணம்

# குற்றியலுகரம் குற்றியலிகரம்

## கீழ்க்காணும் சொற்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக

ஆறு, எஃகு, கரும்பு, விறகு, வழக்கு, எட்டு, ஏடு, பந்து, காசு, கொய்து

| நெடில் தொடர் | ஆய்தத் தொடர் | உயிர்த் தொடர் | வன் தொடர் | மென் தொடர் | இடைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஆறு, காசு, ஏடு | எஃகு | விறகு | உழக்கு, எட்டு | பந்து, கரும்பு | கொய்து |

## பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக:

1. பசு, வீடு, ஆறு, கரு - கரு
2. பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து - பஞ்சு
3. ஆறு, மாசு, பாகு, அது - அது
4. அரசு, ஏய்து, மூழ்கு, மார்பு - அரசு
5. பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு - எஃகு

## குறு வினா விடை:

**1. 'குற்றியலுகரம்' என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.**

குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம்

வல்லின எழுத்துக்கள் ஆறின் மீதும் ஏறி வரும் உகரம் தனக்கு உரிய மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும். அதற்கு குற்றியலுகரம் என்று பெயர்.

எடுத்துக்காட்டு: எஃகு, காசு, பயறு, பாட்டு, பந்து, சால்பு

**2. குற்றியலிகரம் என்றால் என்ன?**

(i) குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம்

(ii) வரகு + யாது = வரகியாது

(iii) குற்றியலுகரச் சொற்களின் முன் யாது என்னும் சொல் வருமொழியாக வந்து சேரும்போது, நிலை மொழியீற்று, உகரம் இகரமாகத் திரிந்து தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து அரை மாத்திரை அளவில் ஒலிக்கும். இது குற்றியலிகரம் எனப்படும்.

## சொற்களை எடுத்து எழுதுக:

கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு ஏற்பத் தொடரில் அழுத்தம் தர வேண்டிய சொற்களை எடுத்து எழுதுக:

| | | |
|---|---|---|
| **வினா** | **-** | **அழுத்தம் தரவேண்டிய சொல்** |
| கோதை எதைப் படித்தாள்? | - | எதை? |
| கவிதையைப் படித்தது யார்? | - | யார்? |
| கோதை கவிதையை என்ன செய்தாள்? | - | என்ன? |

## கீழ்க்காணும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துக:

வயல், முகிலன், குதிரை, கயல்விழி, தலைவி, கடல், ஆசிரியர், புத்தகம், சுரதா, மரம்

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| முகிலன், கயல்விழி, தலைவி, ஆசிரியர், சுரதா, | வயல், குதிரை, கடல், புத்தகம், மரம் |

## தொகைச் சொற்களை விரித்து எழுதுக:

(எ.கா): இருதிணை: உயர்திணை, அஃறிணை

முக்கனி: மா, பலா, வாழை

முத்தமிழ்: இயல், இசை, நாடகம்

நாற்றிசை: கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு

ஐவகை நிலம்: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

அறுசுவை: இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, கசப்பு, உவர்ப்பு

## கட்டங்களிலுள்ள எழுத்துக்களை மாற்றி மேலிருந்து கீழாகவும், இடமிருந்து வலமாகவும் எழுதினால் ஒரே சொல் வருமாறு கட்டங்களில் எழுதுக:

| | | |
|---|---|---|
| ம | த | கு |
| த | ந் | தி |
| கு | தி | ரை |

## இரு பொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக:

1. மழலை பேசும் மொழி அழகு

   இனிமைத் தமிழ் மொழி எமது

2. அன்னை, தந்தையின் கைப்பிடித்து குழந்தை நடை பழகும்

   அறிஞர் அண்ணாவின் சிறப்பு அவரது அடுக்கு மொழி நடை

3. நீ அறிந்ததைப் பிறருக்குச் சொல்

   எழுத்துக்கள் தொடர்ந்து நின்று பொருள் தருவது சொல்

4. உழவர்கள் நாற்று நட வயலுக்குச் செல்வர்.

   குழந்தையை மெதுவாக நட என்போம்.

5. நீதிமன்றத்தில் தொடுப்பது வழக்கு

   'நீச்சுத் தண்ணி குடி' என்பது பேச்சு வழக்கு

## இயல் - 2 செய்யுள் பகுதி – காடு

**- சுரதா**

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. வாழை, கன்றை ஈன்றது
2. 'காடெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது காடு + எல்லாம்
3. கிழங்கு + எடுக்கும் என்பதனை சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் கிழங்கெடுக்கும்

**நயம் அறிக:**

பாடலிலுள்ள மோனை. எதுகை, இயைச் சொற்களை எடுத்து எழுதுக

**மோனை:**

கார்த்திகை - காடெல்லாம்

பார்த்திட - பார்வை

குரங்கு - கொம்பில்

நச்சர - நரியெல்லாம்

சிங்கம் - சிறுத்தை

காடு - காய்கனி

கூடிக் - குளிர்ந்த

பச்சை - பன்றி

புதுநடை - பூங்குயில்

**எதுகை:**

கார்த்திகை - பார்த்திட

குரங்கு - மரங்கள்

அதிமது - புதுநடை

**இயைபு:**

ஈன்றெடுக்கும் - நிழல் கொடுக்கும்

கிழங்கெடுக்கும் - ஊளையிடும்

கனிபறிக்கும் - தடையிருக்கும்

தின்றபடி - கூவுமடி

## குறு வினா விடை:

**1. காட்டு பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?**

கார்த்திகை விளக்குகள் போலக் காடு முழுவதும் மலர்கள் மலர்ந்திருக்கும்.

**2. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?**

காடு பல வகையான பொருள்களைத் தரும். காய்கனிகளையும் தரும். எல்லாரும் கூடி மகிழ்ந்திட குளிர்ந்த நிழல் தரும். அங்கே வசிக்கும் குரங்குகள், மரக்கிளையில் உள்ள கனிகளைப் பறித்து உன்னும், மரங்கள் வெயிலை மறைத்து நிழல் தரும்.

## சிறு வினா விடை:

**1. காடு பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக:**

பச்சை நிறம் உடைய மயில்கள் நடனமாடும் பன்றிகள் காட்டில் உள்ள கிழங்குகளைத் தோண்டி உண்ணும். அதனைக் கண்டு நஞ்சினை உடைய பாம்புகள் கலக்கமடையும். நரிக்கூட்டம் ஊளையிடும். மிகுந்த சுவையுடைய தழையை யானைகள் தின்றபடி புதிய நடைபோடும். பூக்கள் பூத்துக் குலுங்கும். மரங்களில் குயில்கள் கூவும். இயற்கைத் தங்குமிடமாகிய காட்டில் சிங்கம், புலி, கரடி, சிறுத்தை போன்ற விலங்கினங்கள் எங்கும் அலைந்து திரியும்.

## சிந்தனை வினா:

**காட்டை இயற்கை விடுதி என்ற கவிஞர் கூறக் காரணம் என்ன?**

காடுகளினால் உயிரியல் பன்மை வளம் பாதுகாக்கப்படுகின்றது. காடுகளில் அரிய வகை மூலிகைகள் கிடைக்கின்றன. விலங்குகள், பறவைகள் ஆகியவற்றிற்கு

புகலிடங்களாக விளங்குகின்றன. வனப் பொருட்கள், கனி வளங்கள் காடுகளிலிருந்து கிடைக்கின்றன.

விடுதி என்றால் மனிதனாக உருவாக்கப்பட்ட அறைகளைக் கொண்ட கட்டிடமாகும். இது செயற்கையாக உருவாக்கப்படுபவை. ஆனால் காடு விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் இயற்கையே உருவாக்கிக் கொடுத்த இயற்கை உறைவிடமாகும். அதனால்தான் கவிஞர் காட்டை இயற்கை விடுதி என்று கூறுகிறார். இங்கு அவைகள் எதற்காகவும் பணம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. உணவும் இலவசமாவே கிடைக்கின்றது. எந்த நேரத்திலும் உண்ணலாம். உறங்கலாம். காடு முழுவதும் சுற்றித் திரியலாம். எங்கு வேண்டுமென்றாலும் தங்கிக் கொள்ளலாம். எந்தவிதமான கட்டுப்பாடும் கிடையாது. அப்படி இருக்கும் காட்டை இயற்கை விடுதி என்று ஆசிரியர் கூறுவது பொருத்தமானதாக அமைகிறது.

## செய்யுள் அப்படியே நிற்கட்டும் அந்த மரம்

**-ராஜமார்த்தாண்டன்**

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. நாவற்பழத்திற்கு உவமையாக கூறப்படுவது

   (ஆ) கோலிக்குண்டு

2. ‘சுட்ட பழங்கள்’ என்று குறிப்பிடப்படுபவை

   (அ) ஒட்டிய பழங்கள்

3. ‘பெயரறியா’ என்னும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது

   (இ) பெயர் + அறியா

4. ‘மனமில்லை’ என்னும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது

   (ஈ) மனம் + இல்லை

5. நேற்று + இரவு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

   (ஆ) நேற்றிரவு

### குறுவினா விடை:

**1. நாவல் மரம் எத்தனை தலைமுறைகளாக அங்கு நின்றிருந்தது?**

தாத்தாவின் தாத்தா காலத்திலிருந்து நாவல் மரம் அங்கு நின்று இருந்தது.

**2. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர்?**

சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க காக்கை, குருவி, மைனா, கிளிகள் இன்னும் பெயரறியா பறவைகள், அணில்கள், காற்றும் உதவின

## சிறு வினா:

**நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?**

ஊரின் வடகோடியில் நாவல் மரம் ஐந்து வயதில் பார்த்தபோதும் இப்படியேதான் இருந்தது. ஐம்பது வயது தாண்டியும் இன்றும் அப்படியே தான் நின்றது. தாத்தாவின் தாத்தா காலத்தில் நட்டு வளர்த்த மரமாம் அப்பா சொல்லக் கேட்டிருக்கிறேன். பச்சைக்காய்கள் நிறம் மாறிச் செங்காய் தோற்றம் கொண்டதுமே சிறுவர்கள் மனங்களில் பரவசம் பொங்கும். காக்கை, குருவி, மைனா, கிளிகள் இன்னும் பெயரறியாப் பறவைகளுடன் அணில்களும் காற்றும் உதிர்த்திடும் சுட்ட பழங்களைப் பொறுக்க சிறுவர் கூட்டம் அலைமோதும். என்மன வெளியில் அப்படியே நிற்கட்டும் அந்த மரம் குன்றுகளின் நடுவே மாமலை போல என்று தன் நினைவுகளாகக் கவிஞர் கூறுகிறார்.

## சிந்தனை வினா:

**பெருங்காற்றில் வீழ்ந்த மரத்தைக் கவிஞர் ஏன் பார்க்க விரும்பவில்லை?**

பல தலைமுறைகளாய் வாழ்ந்து கொண்டிருந்த மரம் பெருங்காற்றில் வீழ்ந்தது என்பதைக் கேள்விப்பட்ட கவிஞர் அதைப் பார்க்க விரும்பவில்லை. காரணம் பல தலைமுறைகளாய் பல ஆயிரம் பேருக்குத் தன் கனிகளை வழங்கிய மரம் பல ஆயிரம் பறவைகளுக்கு உணவாக விளங்கிய மரம். அணில்களுக்கு உணவளித்த மரம். பலதலைமுறையாய் சிறுவர்கள் விளையாடிய மரம். வழிப்போக்கர்களுக்கும் ஓய்வெடுப்பவர்களுக்கும் ஓய்வாக விளங்கிய மரம். இளங்காற்றை வீசிய மரம். ஊரின் பெருமையாக விளங்கிய மரம். ஊரின் அடையாளமாக விளங்கிய மரம். தித்திக்கும் கனிகளை வழங்கிய மரம். பல நபர்களுக்கு உயிர்மூச்சை வழங்கிய மரம் கவிஞர் தான் விளையாடியது மட்டுமில்லாமல் தன்மகனும் விளையாடிய மரம் உறவுமுறைகளுக்காய்பழம் சேகரிக்கப்பட்ட மரம். கல்லடிபட்டாலும் கலங்காது கனியை தந்த மரம். தன் நினைவில் பல ஆண்டுகளாக நின்ற மரம் வீழ்ந்தது என்பதை கேள்விப்பட்ட கவிஞர் மனது அதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. பெருமையாகத் தான் பேசிய மரம் இன்று வீழ்ந்தது. நாளை இல்லாமல் போய் விடும் என்பதை மனது ஏற்கவில்லை. அதனால் அது இருப்பதாகவே தன் மனதுள் எண்ணிக் கொள்வதால் வீழ்ந்த மரத்தைப் பார்க்க விரும்பவில்லை.

## மேலும் சில வினாக்கள்:

**1. நாவல் மரம் எப்போது நடப்பட்டது?**

நாவல் மரம் கவிஞரின் தாத்தாவின் தாத்தா காலத்தில் நடப்பட்டது.

**2. சிறுவர் மனங்களில் எப்போது பரவசம் பொங்கும்?**

நாவல் மரத்தின் பச்சைக் காய்கள் நிறம் மாறிச் செங்காய் தோற்றம் கொண்டதுமே சிறுவர் மனங்களில் பரவசம் பொங்கும்

**3. யார் யாருக்காகப் பழம் பொறுக்குவர்?**

வயது வந்த அக்காக்களுக்காக கையில் பெட்டியுடன் ஓடிஓடிப் பழம் பொறுக்குவர் தங்கைகள்.

**4. இரவில் வருவது எது?**

இரவில் மெல்லிய நிலவொளியில் படையெடுத்து வரும் பழந்திண்ணி வௌவால் கூட்டம்.

## இயல் : 2 உரைநடை உலகம்

## விலங்குகள் உலகம்

### சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:

1. ஆசிய யானைகளில் ஆண், பெண் யானைகளை வேறுபடுத்துவது

(ஆ) தந்தம்

2. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம்

(இ) முண்டந்துறை

3. ‘காட்டாறு’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(அ) காடு + ஆறு

4. ‘அனைத்துண்ணி’ என்னம் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைக்கும் சொல்

(ஈ) அனைத்து + உண்ணி

5. ‘நேரம்+ஆகி’ என்பதனை சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

(அ) நேரமாகி

6. ‘வேட்டை + ஆடிய என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

(ஆ) வேட்டையாடிய

### கோடிட்ட இடத்தை நிரப்புக:

1. ‘காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு’ என்று அழைக்கப்படும் விலங்கு புலி

2. யானைக் கூட்டத்திற்கு ஒரு பெண் யானைதான் தலைமை தாங்கும்.

3. கரடிகளைத் தேனீக்களிடமிருந்து காப்பது அதன் உடலைப் போர்த்தியிருக்கும் அடர்ந்த முடிகள்.

## குறு வினா விடை:

**1. காடு – வரையறுக்க:**

மனித முயற்சியின்றி வளர்ந்த மரங்கள் செடி கொடிகள், புல், புதர்கள், பூச்சியினங்கள், பறவைகள், விலங்குகள் போன்ற பல்லுயிர்களின் வாழ்விடமாகவும் இடை இடையே காட்டாறுகளும், நீரோடைகளும் இருப்பது தான் காடாகும்.

**2. யானைகள் மனிதர்களை ஏன் தாக்குகின்றன?**

யானைகள் பொதுவாக மனிதர்களைத் தாக்குவது இல்லை. அவற்றின் வழித்தடங்களில் குறுக்கிடும்போது தான் மனிதர்களை தாக்குகின்றன.

**3. கரடி 'அனைத்துண்ணி' என அழைக்கப்படுவது ஏன்?**

கரடி பழங்கள், தேன் போன்றவற்றை உணவாக உண்ணும். மேலும் உதிர்ந்த மலர்கள், காய்கள், புற்றீசல், கரையான் போன்றவற்றையும் உணவாக உண்பதால் அனைத்துண்ணி என்று அழைக்கப்படுகிறது.

**4. மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக:**

சருகுமான், மிளாமான், கவரிமான், புள்ளிமான் எனப் பலவகை உண்டு.

## குறு வினா விடை:

**1. புலிகள் குறித்து நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக:**

புலிகள் மனிதர்களைத் தாக்குவதில்லை. இரவில் மட்டுமே வேட்டையாடும் தன்மை கொண்டது. புலிகள் தனித்து வாழும் இயல்புடையவை. ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு புலி மட்டுமே வாழும். மற்ற புலிகள் அந்த எல்லைக்குள் செல்லாது. கருவுற்ற புலியானது தொண்ணூறு நாட்களில் இரண்டு அல்லது மூன்று குட்டிகள் ஈனும். அந்தக் குட்டிகளை இரண்டு ஆண்டுகள் வரை வளர்த்து வரும். அவை வேட்டையாடக் கற்றவுடன் அவற்றுக்கான எல்லைகளையும் பிரித்து தனியாக அனுப்பி விடும்.

புலிதான் ஒரு காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு. புலி தனக்கான உணவை வேட்டையாடிய பின்பு வேறு எந்த விலங்கையும் வேட்டையாடுவதில்லை. நீளம், உயரம், பருமன், எடை, பலம், வேட்டைத்திறன் ஆகிய அனைத்திலும் சிங்கத்தைவிட புலியே உயர்ந்தது.

## சிந்தனை வினா விடை:

**1. காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக:**

**(i) மண் அரிப்பு ஏற்படுவதால் :**

தற்பொழுது காடுகளின் அழிவின் காரணமாக மண் அரிப்பு தவிர்க்க இயலாத பிரச்சினையாக மாறிவருகிறது. மண் அரிப்பு ஏற்படுவதால் விவசாயம் பெரிதும் பாதிப்படையும். வருடந்தோறும் சுமார் 40 ஆயிரம் ஹெக்டேர் நிலங்கள் மண் அரிமானத்தின் காரணமாக எதுவும் விளையாத வறட்டு நிலமாக மாறி வருகிறது.

**(ii) பாலைவனங்கள் உருவாதல் :**

காடுகளின் அழிப்பினால் நிலத்தில் எந்த உயிரினமும் நுண்ணுயிர்களும் வாழ முடிவதில்லை. மண்ணின் உயிரியல் வளம் அழிவதால் அந்த நிலம் எதற்கும் பயன்படாமலும் எதுவும் விளையாமலும் பாலைவனமாக மாறுகிறது.

**(iii) மழைப்பொழிவு பாதிப்பு :**

மரங்களின் அழிவால் காற்று மண்டலத்தில் கார்பன் டை ஆக்சைடின் அளவு அதிகமாகி விடுகிறது. இதனால் மழை குறைந்து வறட்சி ஏற்படுகிறது.

**(iv) வறட்சி :**

மழை பொழியும் பகுதிகளில் உள்ள காடுகள் அழிக்கப்படுவதால் ஓடைகள் வறண்டு விடுகின்றன. ஆறுகளில் வறட்சிக் காலங்களில் மிகக் குறைந்த அளவே தண்ணீர் இருக்கிறது.

**(v) பல்லுயிரினங்கள் அழிதல் :**

ஒரு தாவரம் அழிக்கப்பட்டால் அதை நம்பி வாழும் உயிரினங்கள் அழிகின்றன. சீனக் காடுகளில் மூங்கில் குறுத்துகளை மட்டுமே சாப்பிட்டு வாழும் பாண்டா கரடிகள் தற்போது அரிதாகிவிட்டன. இதன் காரணம் என்ன? மூங்கில் காடுகள் அழிக்கப்பட்டு விட்டதுதான் காரணம்.

## மேலும் சில வினா விடைகள்:

**1. யானைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

யானைகள் இருவகைப்படும். அவை ஆசிய யானைகள், ஆப்பிரிக்க யானைகள் ஆகும்.

**2. கரடி எவற்றை உணவாக உட்கொள்ளும்?**

பழங்கள், தேன், காய்கள், உதிர்ந்த மலர்கள், புற்றீசல், கரையான் ஆகியவற்றை உணவாக உட்கொள்ளும்.

**3. சிங்கத்தின் வகைகள் யாவை?**

சிங்கங்கள் இரண்டு வகைப்படும். அவை ஆசிய சிங்கங்கள், ஆப்பிரிக்க சிங்கங்கள் ஆகும்.

**4. புலியின் வேட்டையாடும் பண்பைக் கூறுக?**

புலி இரவில் மட்டுமே வேட்டையாடும் தன்மை கொண்டது. புலி தனக்கான உணவை வேட்டையாடிய பின்பு வேறு எந்த விலங்கினையும் வேட்டையாடுவதில்லை.

## புறவய வினாக்கள்:

**1. தமிழ்நாட்டில் வனக்கல்லூரி அமைந்துள்ள இடம்**

மேட்டுப்பாளையம்

**2. தமிழ்நாட்டில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் உள்ள இடம்**

கோவை

## இயல் - 2 இலக்கணம் (கற்கண்டு)

## நால்வகை குறுக்கங்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. 'வேட்கை' என்னும் சொல்லின் ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரை அளவு <u>ஒன்று</u>

2. மகரக் குறுக்கம் இடம் பெறாத சொல் <u>பணம் கிடைத்தது</u>

3. சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது <u>ஔகாரக் குறுக்கம்</u>

## குறுவினா விடைகள்:

**1. ஔகாரம் எப்பொழுது முழுமையாக ஒலிக்கும்?**

ஔ, வௌ என ஔகார எழுத்து தனித்து வரும் இடங்களில் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது.

**2. சொல்லின் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் ஐகாரக் குறுக்கம் பெரும் மாத்திரை அளவு யாது?**

வையம் - சொல்லின் முதலில் ஒன்றரை மாத்திரை

சமையல் - சொல்லின் இடையில் ஒரு மாத்திரை

பறவை - சொல்லின் இறுதியில் ஒரு மாத்திரை

**3. மகரக் குறுக்கத்துக்கு இரண்டு எ.காட்டுகள் தருக.**

(எ.கா) வலம் வந்தான், மருண்ம்

## எதிர்பாலுக்குரிய பெயர்களை எழுதுக:

1. மகளிர் x ஆடவர்
2. அரசன் x அரசி
3. பெண் x ஆண்
4. மாணவன் x மாணவி
5. சிறுவன் x சிறுமி
6. தோழன் x தோழி

## பிழையைத் திருத்திச் சரியாக எழுதுக:

1. கோவலன் சிலம்பு விற்கப் போனான்
2. அரசர்கள் நல்லாட்சி செய்தனர்
3. பசு கன்றை ஈன்றது
4. மேகங்கள் சூழ்ந்து கொண்டன
5. குழலி நடனம் ஆடினாள்

## வட்டத்திலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை அமைக்க:

| | |
|---|---|
| புதையல் | கல் |
| இலை | தையல் |
| கலை | இயல் |
| புல் | கடல் |
| கதை | கடலை |

## சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் அமைக்க:

குருவி + கூடு = குருவிக்கூடு

குருவி + கூட்டம் = குருவிக்கூட்டம்

விளையாட்டு + திடல் = விளையாட்டுத்திடல்

தயிர் + கூடு = தயிர்க்கூடு

தயிர் + சோறு = தயிர்ச்சோறு

கொய்யா + காய் = கொய்யாக்காய்

கொய்யா + பழம் = கொய்யாப்பழம்

அவரை + காய் = அவரைக்காய்

பாட்டு + போட்டி = பாட்டுப்போட்டி

பறவை + கூடு = பறவைக்கூடு

பறவை + கூட்டம் = பறவைக்கூட்டம்

## விடுகதைகளுக்கு விடை எழுதுக:

1. அணில்
2. குதிரை
3. கொக்கு

# இயல் - 2 திருக்குறள்

## சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:

1. வாய்மை எனப்படுவது <u>தீங்குதராத சொற்களை பேசுதல்</u>

2. <u>பொறாமை உள்ளவன்</u> செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்

3. 'பொருட்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது <u>பொருள் + செல்வம்</u>

4. 'யாதெனின்' எனும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது <u>யாது + எனின்</u>

5. 'தன்+நெஞ்சு' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது <u>தன்னெஞ்சு</u>

6. தீது + உண்டோ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் <u>தீதுண்டோ</u>

## சிறந்த அரசின் பணிகளை வரிசைப்படுத்தி எழுதுக:

(அ) பொருள் வரும் வழிகளை அறிதல்

(ஆ) பொருட்களைச் சேர்த்தல்

(இ) சேர்த்த பொருளைப் பாதுகாத்தல்

(ஈ) பொருளைப் பிரித்துச் செலவு செய்தல்

## குறுவினா விடை:

**1. எப்போது தன்நெஞ்சே தன்னை வருத்தும்?**

ஒருவர் தன் நெஞ்சறிய பொய் சொல்லக் கூடாது. அவ்வாறு கூறினால் அவர் நெஞ்சமே அவரை வருத்தும்.

**2. வாழும் நெறி யாது?**

ஒருவர் தன் நெஞ்சில் பொறாமையில்லாத குணத்தையே ஒழுக்க நெறியாகக் கொண்டு வாழ வேண்டும்.

**3. உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் யார்?**

உள்ளத்தில் பொய் இல்லாமல் வாழ்பவர், உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவர் ஆவார்.

## கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு திருக்குறள் அமைக்க:

1. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்

   புரியார் கண்ணும் உள.

2. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்

   செல்வத்துள் எல்லாம் தலை.

## பின்வரும் பத்திக்குப் பொருத்தமான திருக்குறளை தேர்ந்தெடு.

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்

உள்ளத்துள் எல்லாம் உளன்.

## மேலும் சில வினா விடைகள்:

**1. 'நெறியாக' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது?**

நெறி + ஆக

**2. கண் + நின்று என்பதைச் சேர்த்தெழுதக் கிடைப்பது**

கண்நின்று

**3. அருள் + செல்வம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது**

அருட்செல்வம்

**4. சான்றோரால் ஆராயப்படுவது யாது?**

பொறாமை கொண்டவருடைய செல்வமும் பொறாமை இல்லாதவருடைய வறுமையும் சான்றோரால் ஆராயப்படும்.

**5. யாருடைய வாழ்வில் துன்பம் இல்லை?**

பிறருடைய குற்றத்தைக் காண்பது போல், தன்னுடைய குற்றத்தையும் காண்பவருடைய வாழ்வில் துன்பம் இல்லை.

# இயல் - 3 செய்யுட்பகுதி

## புலி தங்கிய குகை

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. 'யாண்டு' என்னும் சொல்லின் பொருள் <u>எங்கு</u>

2. 'யாண்டுளனோ? என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   <u>யாண்டு + உளனோ?</u>

3. 'கல்+ அளை' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் <u>கல்லளை</u>

### குறுவினா விடை:

**1. தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?**

புலி தங்கிச் சென்ற குகையை உவமையாகக் கூறுகிறார்.

### சிறுவினா விடை:

**1. தம் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக?**

'சிறு அளவிலான எம் வீட்டின் தூணைப் பற்றிக் கொண்டு, ஏதும் அறியாதவள் போல் நீ உன் மகன் எங்கே? என என்னைக் கேட்கிறாய், அவள் எங்குள்ளான் என்று எனக்குத் தெரியவில்லை ஆயினும் புலி தங்கிச் சென்ற குகை போல அவனைப் பெற்றெடுத்த வயிறு என்னிடம் உள்ளது. அவன் இங்கில்லை எனில் போர்க்களத்தில் இருக்கக்கூடும். போய்க் காண்பாயாக' என்று தம் மகன் குறித்துத் தாய் கூறினாள்.

### சிந்தனை வினா விடை:

**1. தாய் தன் வயிற்றைப் புலி தங்கிச் சென்ற குகையோடு ஒப்பிடுவது ஏன்?**

புலி எங்கு வேட்டையாடச் சென்றாலும் வேட்டையாடிய பின்னர் தன் குகைக்குத் திரும்பிவிடும். வீரர்களும் போரின் பொருட்டு எங்குச் சென்றாலும் போர் முடித்தவுடன் தன் வீட்டிற்கே திரும்புவர். புலி வீரத்தின் அடையாளம். வீரனும் வீரத்தின் அடையாளம் புலி படுத்துறங்குமிடம் குகை. மனிதன் பத்து மாதம் படுத்துறங்கிய இடம் தாயின் கருவறை. அதனால் தான் தாய் தன் வயிற்றைப் புலி தங்கிச் சென்ற குகையோடு ஒப்பிடுகிறார்.

## மேலும் சில வினா விடைகள்:

**1. சால்புடைய பெண் எவ்வாறு நின்றாள்?**

சால்புடைய பெண் சிறு அளவிலான வீட்டின் தூணைப் பற்றிக் கொண்டு நின்றாள்.

**2. காவற்பெண்டு யாருக்கு செவிலித்தாயாக விளங்கினார்?**

சோழ மன்னன் போரவைக் கோப்பெரு நற்கிள்ளியின் செலிவித்தாயாகக் காவற்பெண்டு விளங்கினார்.

# செய்யுட்பகுதி

# பாஞ்சை வளம்

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. ஊர்வலத்தின் முன்னால் வாரணம் அசைந்து வந்தது

2. பாஞ்சாலங்குறிச்சியில் முயல் நாயை விரட்டிடும்

3. மெத்தை வீடு என்று குறிப்பிடப்படுவது மாடிவீடு

4. 'பூட்டுங்கதவுகள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது பூட்டும்+கதவுகள்

5. 'தோரணமேடை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது தோரணம் + மேடை

6. வாசல் + அலங்காரம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் வாசலலங்காரம்

## பொருத்துக:

பொக்கிஷம் - செல்வம்

சாஸ்தி - மிகுதி

விஸ்தாரம் - பெரும் பரப்பு

சிங்காரம் - அழகு

## குறுவினா விடை:

**1. பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டைகள் பற்றி கூறுக.**

பாஞ்சாலங்குறிச்சியில் பல சுற்றுகளாகக் கோட்டைகள் இருக்கும். அவை மதில்களால் சூழப்பட்டவையாக மிகவும் வலிமையாகக் கட்டப்பட்டிருக்கும்.

**2. பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளம் எத்தகையது?**

பூஞ்சோலைகளும், சந்தன மரச் சோலைகளும், ஆறுகளும்,நெல் வயல்களும் பாக்குத்தோப்புகளும் நாட்டிற்கு அழகு சேர்க்கும்.

## சிறுவினா விடை:

**1. பாஞ்சாலங்குறிச்சியில் வீடுகள் எவ்வாறு இருக்கும்?**

வீடுகள் தோறும் மணிகளால் அழகு செய்யப்பட்ட மேடைகள் இருக்கும். வீடுகள் எல்லாம் மதில்களால் சூழப்பட்டு மாடி வீடுகளாக இருக்கும். வீட்டுக் கதவுகள் மிகவும் நேர்த்தியாகவும் வீடுகள் செல்வம் நிறைந்தவையாகவும் இருக்கும்.

**2. பாஞ்சாலங்குறிச்சியின் வீரத்துக்குச் சான்றாகும் நிகழ்வுகள் பற்றி எழுதுக.**

வீரம் மிகுந்த நாடாகிய பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள முயலானது தன்னைப் பிடிக்க வரும் வேட்டை நாயை எதிர்த்து விரட்டி விடும் பசுவும், புலியும் நீர் நிலையின் ஒரே துறையில் நின்று பால்போன்ற தண்ணீரைக் குடிக்கும் மன்னன் கட்டப்பொம்மனின் பெயரைச் சொன்னால் கறந்து வைத்த பாலைக் கூட காகம் குடிக்காது.

## சிந்தனை வினா விடை:

**நாட்டுப்புறக்கதைப் பாடல்களில் கட்டபொம்மன் பெரிதும் புகழப்படக் காரணம் என்ன?**

வீரபாண்டிய கட்டபொம்மன் சிறப்புப் பெற்ற வீரராகத் திகழ்ந்ததனால் அவர் புகழ் பெரிதும் போற்றப்பட்டது. அன்றைய காலம் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த போது மக்களை ஒன்றுத் திரட்டவும் மக்களின் மனதில் வீரத்தையும் ஊட்ட கதைகள் தேவைப்பட்டது. அதுவும் தலைசிறந்த தலைவர்களின் கதைகளை மக்கள் விரும்பினர். அந்தக் கால கட்டத்தில்தான் கட்டபொம்மன் கதைப்பாடல் மக்களிடையே வேகமாகப் பரவியது. அதனால் தான் நாட்டுப்புறக் கதைப் பட்டைகள் கட்டபொம்மன் பெரிதும் போற்றப் படக் காரணமாய் அமைந்தார். அது மட்டுமல்லாமல் அவரது வீர வாழ்க்கையும் மக்களை அதிகமாகக் கவர்ந்தன. அதற்கேற்றாற் போல் வசன நடையும் கதை அமைப்பும் அமைந்ததால் அதிகமாக புகழப்பட்டார் அது மட்டுமல்லாமல் விடுதலை போரின் முதல் முழக்கமாக ‘வானம் பொழியுது, பூமி விளையுது, உனக்கேன் தர வேண்டும் வரி’ என்று முழங்கியது ஒரு காரணமாக அமைந்தது.

இந்த முழக்கம் உலகெங்கும் ஒலித்தது. இதை விரும்பாத மக்களே இல்லை. இவ்வாறு கட்டபொம்மன் புகழப்பட பல காரணங்கள் அமைந்தன.

## மேலும் சில வினா விடைகள்:

**1. கட்டபொம்மன் ஆட்சிசெய்த ஊர் எது?**

பாஞ்சாலங்குறிச்சியைக் கட்டபொம்மன் ஆட்சி செய்தார்.

**2. காகம் எதனால் பாலைக்குடிக்காது?**

மன்னன் கட்டபொம்மனின் பெயரைச் சொன்னால் கறந்து வைத்த பாலைக்கூடக் காகம் குடிக்காது. கட்டபொம்மனின் பெயருக்கு அஃறினை உயிரான காகம் கூட மதிப்பு தரும்.

**3. திருவாக்கு அருள்பவள் யார்?**

சக்கம்மாதேவி பாஞ்சாலங்குறிச்சிக்குத் திருவாக்கு அருள்வாள்.

# உரைநடை

## தேசியம் காத்த செம்மல் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. முத்துராமலிங்கத்ததேவர் முதன்முதலில் உரையாற்றிய இடம் சாயல்குடி

2. முத்துராமலிங்கத்தேவர் நடத்திய இதழின் பெயர் நேதாஜி

3. தேசியம் காத்த செம்மல் எனப் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டியவர் திரு.வி.க

## குறுவினா விடை:

**1. முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டிப் பெரியார் கூறியது யாது?**

வீரப் பேச்சால் எத்தனையோ தியாகிகளையும் விவேகப் ச்சேசால் எத்தனையோ உருவாக்கியவர்.அறிவாளிகளையும் உண்டாக்கியவர், உண்மையை மறைக்காமல் வெளியிடுவதில் தனிச் துணிச்சல் பெற்றவர். சுத்தத் தியாகி எனப் பெரியார் முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டிக் கூறியுள்ளார்.

**2. முத்துராமலிங்கத்தேவரின் பேச்சுக்கு வாய்ப்பூட்டு சட்டத்தின் மூலம் தடை விதிக்கப்படக் காரணம் யாது?**

முத்துராமலிங்கத்தேவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றார். தமது பேச்சாற்றலால் ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்களிடம் பெரும் எழுச்சியை ஏற்படுத்தினார். மேடைகளில் அவர் ஆற்றிய வீர உரையைக்

கேட்ட மக்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிராக வீறுகொண்டு எழுந்தனர். அதனால் அச்ச  மடைந்த ஆங்கில அரசு பலமுறை அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. மேலும் வாய்ப்பூட்டுச் சட்டம் மூலம் மேடைகளில் அரசியலில் பேசக் கூடாது என்று அவருக்குத் தடை விதித்தது.

**3. முத்துராமலிங்கத்தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.**

முத்துராமலிங்கத்தேவர் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் சொற்பொழிவு ஆற்றும் திறன் பெற்றிருந்தார். சிலம்பம், குதிரையேற்றம், துப்பாக்கிச் சுடுதல், ஜோதிடம், மருத்துவம் போன்ற பல துறைகளிலும் ஆற்றல் உடையவராக விளங்கினார். இளமையிலேயே அரசியலில் ஆர்வம் கொண்டிருந்தார்.

## சிறுவினா விடை:

**1. நேதாஜியுடன் முத்துராமலிங்கத்தேவர் கொண்ட தொடர்புப் பற்றி எழுதுக.**

வங்கச்சிங்கம் என்று போற்றப்பட்ட நேதாஜி சுபாஷ் சுந்திர போசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவரைத் தமது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார். முத்துராமலிங்கத்தேவரின் அழைப்பை ஏற்று கி.பி.1939 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் ஆறாம் நாள் நேதாஜி தொடங்கிய இந்திய தேசிய இராணுவத்தில் முத்துராமலிங்கத் தேவரின் முயற்சியால் ஏராளமான தமிழர்கள் இணைந்தனர். விடுதலைக்குப்பின் நேதாஜி என்னும் பெயில் வாரஇதழ் ஒன்றையும் தேவர் நடத்தினார்.

**2. தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத்தேவர் செய்த தொண்டுகள் யாவை?**

1939 ஆம் காலக்கட்டத்தில் மதுரையில் 23 தொழிலாளர் சங்கங்களின் தலைவராகத் தேவர் திகழ்ந்தார். மதுரையிலிருந்து நூற்பு ஆலை ஒன்றில் வேலை செய்த தொழிலாளர்களின் உரிமைக்காகத் தோழர் ப.ஜீவனந்தத்துடன் இணைந்து 1938 ஆம் ஆண்டு போராட்டம் நடத்தினார். அதற்காக ஏழு திங்கள் சிறைத் தண்டனை பெற்றார். உழவர்களின் நலன் காக்க இராஜ பாளையத்தில் மிகப்பெரிய அளவிலான மாநாடு ஒன்றை நடத்தினார். பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என்று போராடினார்.

# சிந்தனை வினா விடை:

**1. சிறந்த தலைவருக்குரிய பண்புகள் எவை என நீங்கள் கருதுகிறீர்கள்?**

மனித நேயத்துடன் நடந்து கொள்ள வேண்டும் பிறர் முன்னேறும் சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும். சரியான திட்டமிடல் வேண்டும். நேரத்தின் அருமையை உணர வேண்டும். இருப்பதில் நீறைவு காண வேண்டும். பொறுமை காத்தல் வேண்டும். பகை உணர்வு நீக்கல் வேண்டும் பொறாமை கொள்ளல் கூடாது. குறைகளைக் களைய வேண்டும். பொறுப்போடு முடிவெடுக்க வேண்டும்.

தோல்வியைக் கண்டு துவண்டு விடக்கூடாது. ஒழுக்கம் பேணுதல் வேண்டும். எடுத்துக்காட்டு வாழ்வு வாழ வேண்டும். பரிவு, இரக்கம், கருணை வேண்டும். அதிகாரத்தை அர்த்தமுள்ளதாக பயன்படுத்த வேண்டும். அறிவை வளர்க்க வேண்டும். பொதுநல மனப்பான்மை வேண்டும். சகோரத்துவம் சமத்துவம் காத்தல் வேண்டும் நாட்டுப்பற்று வேண்டும். ஏழைகளின்பால் அன்பு வேண்டும். தன முடிவை பிறருடன் பகிர்தல் வேண்டும் நேர்மையுடன் நடத்தல் வேண்டும் மனதில் தூய்மை வேண்டும். தாயாகவும் தந்தையாகவும் நாட்டு மக்களை காக்க வேண்டும். கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும்.

## மேலும் சில வினா விடைகள்:

**1. முத்துராமலிங்கத்தேவர் எங்கு, எப்போது பிறந்தார்?**

1906 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முப்பதாம் நாள் இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் என்னும் ஊரில் செல்வச் செழிப்பு மிகுந்த குடும்பத்தில் பிறந்தார்.

# இலக்கணம் - வழக்கு

## பொருத்துக:

1. பந்தர் - கடைப்போலி
2. மைஞ்சு - முதற்பொலி
3. அஞ்சு - முற்றுப்பொலி
4. அரையர் - இடைப்போலி

## குறுவினா விடை:

**1. வழக்கு என்றால் என்ன?**

எழுத்திலும் பேச்சிலும் சொற்களைப் பயன்படுத்தும் முறை வழக்கு எனப்படும் நம் முன்னோர் எந்தெந்தச் சொற்களை என்னென்ன பொருளில் பயன்படுத்தினார்களோ, அச்சொற்களை அவ்வாறே பயன்படுத்துவதை வழக்கு என்பர்.

**2. தகுதி வழக்கின் வகைகள் யாவை?**

தகுதி வழக்கு மூன்று வகைப்படும்.

i. இடக்கரடக்கல
ii. மங்கலம்
iii. குழூஉக்குறி

**3. வாழைப்பழம் மிகவும் நஞ்சு விட்டது. இத்தொடரில் இடம் பெற்றுள்ள போலிச் சொல்லைக் கண்டறிக. அதன் சரியான சொல்லை எழுதுக**

நஞ்சு என்பது போலிச் சொல். இது முற்றுப்போலி ஆகும். நைந்து - என்பது சரியான சொல் ஆகும்.

# மொழியை ஆள்வோம்

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் அமையும் ஐந்து தொடர்களை எழுதுக

i. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்

ii. அழகன் கவிதை எழுதுகிறான்

iii. மாவட்ட ஆட்சியர் கொடி ஏற்றினார்.

iv. குடியரசுத் தலைவர் உலகத்தமிழ் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

v. வயலில் ஆடுகள் மேய்ந்தன.

# மொழியோடு விளையாடு

## இடைச்சொல் 'கு' சேர்த்துத் தொடரை எழுதுக.

(எ.கா) வீடு சென்றான் - வீடு + கு + சென்றான் = வீட்டுக்குச் சென்றான்

1. மாடு புல் கொடுத்தார் - மாட்டுக்குப் புல் கொடுத்தார்
2. பாட்டு பொருள் எழுதுக - பாட்டுக்குப் பொருள் எழுதுக
3. செடி பாய்ந்த நீர் - செடிக்குப் பாய்ந்த நீர்
4. முல்லை தேர் தந்தான் பாரி - முல்லைக்குத் தேர் தந்தான் பாரி
5. சுவர் சாந்து பூசினாள் - சுவருக்குச் சாந்து பூசினாள்

## இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக:

| | | | |
|---|---|---|---|
| கண் | அழகு | கண்ணழகு | கண்ணுண்டு |
| மண் | | மண்ணழகு | மண்ணுண்டு |
| விண் | உண்டு | விண்ணழகு | விண்ணுண்டு |
| பண் | | பண்ணழகு | பண்ணுண்டு |

## அகம் என முடியும் சொற்களை எழுதுக:

(எ.கா) நூலகம்

1. எழிலகம்
2. செயலகம்
3. தலைமையகம்
4. அலுவலகம்
5. மருந்தகம்

## கோடிட்ட இடங்களைத் தமிழ் எண் கொண்டு நிரப்புக:

(எ.கா) திருக்குறள் ௩ பால்கலை கொண்டது.

1. எனது வயது ௧௩. (13)
2. நான் படிக்கும் வகுப்பு ௭. (7)
3. தமிழ் இலக்கணம் ௫ வகைப்படும். (5)
4. திருக்குறளில் ௧௩௩ அதிகாரங்கள் உள்ளன. (133)
5. இந்திய ௧௯௪௭ ஆம் ஆண்டு விடுதலை பெற்றது. (1947)